Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 2, January 2023 E-ISSN: 2583-0481

# Worship of Guardian Deities in Folk Worship

**Dr. P. Nathiya**, Assistant Professor of Tamil, UDC, College,Trichy-19, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-5836-0365
DOI: 10.5281/zenodo.7584061

## Abstract

*The people who live in the countryside are very religious. They have deep faith and determination in God. Among the deities worshipped by these people, Seven Virgins (Kannitheivam) worship is very special. The practice mentions the elements involved in this unique form of virgin worship. Folks worship a deity of their own. One of the most important of these religious traditions is the worship of seven virgin women. This article examines the male deities, the female deities, and the beliefs people have about them. The people of Tamil country have been worshipping their deities from time to time. Through this worship practice, one can know the worship of guardian deities. It can be known that the people in the country have been worshipping the main deity, Karuppasamy, Ayyanar, Kannitheivam, Annanmar, Sudalaiman, Muniyandi and other deities for many generations. One of the most important of these religious traditions is the worship of virgins. This article examines the male deities, the female deities, and the beliefs of the people in rural areas of Tamil Nadu*

**Keywords:** Seven Virgin, Folk Worship, Virgin Worship.

## Reference

[1] Jambulingam, A. *Sirutheiva Valipaatil Naattupurakkoorukal*. Dhanalakashmi Pathippagam, Chennai, First Edition, 1982.
[2] Sarasuvathi Venukopal. *Tamilaga Naatupuraviyal*. Kumari Pathippagam, Chennai, First Edition, 1991.
[3] Sakthivel, Su. *Naatupuraviyal Oor Aaivu*. Paavai Pathippakam, Chennai, First Edition, 1989.
[4] Jambulinkam, A. Mu. Noo. Dhanalakashmi Pathippagam, Chennai, First Edition, 1982.
[5] Sakthivel. Su, Mu. Noo,
[6] Sarasvathi Venukopal, Mu.Noo.
[7] Aaru Ramanathan. *Naatupuraviyal Aaivukal*. Mullaip Pathippakam, Chennai, First Edition, 1987.
[8] Ibid. P. 194,
[9] Ibid. P.206,
[10] Aaru Ramanathan, Naatupurak Kathaikal, Mullaip Pathippakam, Chennai, First Edition, 1987.
[11] Ibid, P. 222,

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# நாட்டுப்புற வழிபாடுகளில் காவல் தெய்வ வழிபாடு

**முனைவர் ப. நதியா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, உருமு தனலெட்சுமி கல்லூரி,
காட்டூர், திருச்சி -19, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-5836-0365
DOI: 10.5281/zenodo.7584061

**ஆய்வுச் சுருக்கம்**

*நாட்டுப்புறத்தில் வாழக்கூடிய மக்கள் மிகுந்த கடவுள் வழிபாடு உடையவர்கள். வழிபடக்கூடிய கடவுளின் மேல் ஆழமான நம்பிக்கையும், மன உறுதியையும் உடையவர்களாக திகழ்கின்றார்கள். இம்மக்கள் வழிபடக்கூடிய தெய்வங்களில் கன்னித்தெய்வ வழிபாடு என்பது சிறப்பு வாய்ந்தாகும். இச்சிறப்பு வாய்ந்த கன்னித்தெய்வ வழிப்பாட்டின் முறையில் இடம்பெற்றுள்ள கூறுகள் பற்றி குறிப்பிடுகின்றது.*

**குறிப்புச் சொற்கள்:** வழிபாடு, கன்னிப்பெண், சப்த கன்னியர், காவல் தெய்வ வழிபாடு.

**முன்னுரை**

நாட்டுப்புற மக்கள் தங்களுக்கென்று ஒரு தெய்வ வழிபாட்டை மேற்கொள்கின்றனர். அவ்வழிபாட்டு மரபுகளில் முக்கியமானதாக கருதப்படுவது கன்னித்தெய்வ வழிபாடாகும். இக்கட்டுரையில் கன்னித்தெய்வங்கள் பற்றியும் அத்தெய்வத்தின் மேல் மக்கள் வைத்திருக்கக்கூடிய நம்பிக்கைகள் பற்றியும் ஆண் தெய்வங்கள் பற்றி இக்கட்டுயானது ஆராய்கின்றது.

**வழிபாடு விளக்கம்**

"வழிபாடு என்பது ஒரு தெய்வத்தை நோக்கிய, மத பக்தியின் செயலாகும்"[1]. ஒரு வழிபாட்டு முறையானது, ஒரு முறைசாரா அல்லது முறையான குழு அல்லது ஒரு நியமிக்கப்பட்ட தலைவரால் தனித்தனியாக செயல்படுவதாகும்.

**கன்னித்தெய்வ வழிபாடு**

கன்னித் தெய்வ வழிபாடு பெரும்பான்மையும் சிறுதெய்வ வழிபாடே ஆகும். கன்னி என்ற சொல்லிற்குப் 'பூப்படைந்து திருமணமாகாத, கன்னித் தன்மை இழக்காத பெண்' என்று அகராதி பொருள் கூறுகிறது. இயல்பாகவோ அல்லது கொலை செய்யப்பட்டோ இறக்கும் பெண்களைக் கன்னித் தெய்வமாக வழிபடும் மரபு தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகிறது. "இறந்த கன்னிப் பெண், தன் வீட்டாருக்கு வளமையும் பாதுகாப்பும் அளிப்பதாகவும், அவள் கன்னிப் பெண்கள் மீது இறங்கி அருள்வாக்குச் சொல்வதாகவும் நம்பப்படுகிறது"[2].

**வீட்டின் அமைப்பு முறைகள்**

பொதுவாக ஒரு வீட்டின் திசைகளைக் கன்னி மூலை (தென்மேற்குப் பகுதி), அக்னி

மூலை (தென்கிழக்குப் பகுதி), வாயு மூலை (வடமேற்குப் பகுதி), ஈசானி மூலை (வடகிழக்குப் பகுதி) என்று பிரித்துக் கூறுவதுண்டு. இதுவே இன்று வாஸ்து சாஸ்திரமாகக் கூறப்படுகிறது. ”வீட்டின் கன்னி மூலைப் பகுதியைத் தெய்வத்திற்கு உரிய இடமாகக் கருதி வழிபடுவது தொன்று தொட்டு இருந்துவரும் மரபாகும்”[3]. உங்கள் வீட்டில் உள்ள பெரியவர்களிடம் கேட்டுப் பாருங்கள், மேலும் சில விளக்கங்கள் கிடைக்கும். வீட்டுத் தெய்வமாக, குலதெய்வமாக, கன்னித் தெய்வங்களே வழிபடப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

**ஏழு கன்னிமார்**

கன்னித் தெய்வங்கள் ஏழு என்று குறிப்பிடும் வழக்கம் காணப்படுகிறது. ஏழு கன்னிமார், சப்த கன்னியர், ஏழு கன்னித் தெய்வங்கள் என்று இதனைக் கூறுவதுண்டு. ”ஏழு கன்னித் தேவதைகள் வானத்திலிருந்து இறங்கி வந்து, நீராடிக் களிப்பது, துன்பப் படுவோர்க்கு உதவுவது போன்ற கதைகள் பரவலாக உள்ளன”[4]. வனப் பகுதிகளிலும் மலையை ஒட்டிய பகுதிகளிலும் திறந்த வெளியில் கன்னித் தெய்வக் கோயில்கள் இருக்கின்றன. இவற்றை வன தேவதைகளாகக் கொண்டு வனத்தில் வழிபடும் வழக்கமும் காணப்படுகிறது. “ஒரே கல்லில் ஏழு பெண் உருவங்கள் வடிவமைக்கப் பட்டு வழிபடப் படுகிறது. இத்தெய்வங்களுக்கு என்று தனித்த வழிபாட்டு முறைகள் இல்லை. பிற தெய்வங்களுடன் இணைத்தே வழிபடப் படுகின்றன”[5].

**ஆண் தெய்வ வழிபாடு**

நாட்டுப்புறச் சிறு தெய்வங்களில் பெண் தெய்வங்களை நோக்க ஆண் தெய்வங்கள் குறைவு என்றுதான் கூற வேண்டும். பெண் தெய்வங்கள் பல்வேறு சக்திகளைத் தங்கள் வசம் வைத்திருப்பதாகவும் ஆண் தெய்வங்கள் குறைந்த சக்தி உடையவையாகவும் நம்பப்படுவதே இதற்குக் காரணம் எனலாம். ‘சக்தி இருந்தா வேலையைச் செய், இல்லையென்றால் சிவனேன்னு கிட’ என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். இது பெண் தெய்வங்களைச் சிறப்பிக்கவே உருவாக்கப் பட்டதாகும். ”ஆண் தெய்வங்களில் சில முதன்மைத் தெய்வங்களாகவும் பல முதன்மைத் தெய்வங்களுக்குத் துணைமைத் தெய்வங்களாகவும் விளங்குகின்றன. துணைமைத் தெய்வங்களைப் ‘பரிவாரத் தெய்வங்கள்’ என்றும் கூறுவதுண்டு”[6].

**முதன்மைத் தெய்வங்கள்**

தனித்த கோயில்களையும் வழிபாட்டு முறைகளையும் தன்னகத்தே கொண்ட தெய்வங்களே இங்கு முதன்மைத் தெய்வங்கள் என்ற நிலையில் விளக்கப்படுகின்றன. இவை ஊர்த் தெய்வங்களாகவோ, காவல் தெய்வங்களாகவோ வழிபடப்படும். தமிழகத்தில் பரவலாக அய்யனார் வழிபாடும், தென் தமிழகப் பகுதியில் **சுடலை மாடன்** வழிபாடும், கொங்கு மண்டலப் பகுதியில் **அண்ணன்மார் சாமி** வழிபாடும் சிறப்பாகக் காணப்படுகின்றன. அந்தந்தப் பகுதி மக்களின் வழிபாட்டு முறைகளுக்கு ஏற்ப ஆண்டு தோறும் விழா எடுக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றன. ”ஒவ்வொரு தெய்வத்திற்கும் என்று தனித்த வழிபாட்டு முறைகள்

உள்ளன. மேற்கூறிய தெய்வங்களுக்கு அடுத்த நிலையில் **மதுரை வீரன், கருப்ப சாமி, முனீஸ்வரன்** போன்ற தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. சில கிராமங்களில் இத்தெய்வங்களுக்குச் சிறப்பான முறையில் வழிபாடு நிகழ்த்தப் படுவதுண்டு. முதன்மைத் தெய்வங்களோடு இணைத்தும் இவை வழிபடப்படுவதுண்டு”[7].

**அய்யனார்**

**அய்யனார்** தெய்வம் கிராமத்தைக் காக்கும் ஊர்ப் பொதுத் தெய்வமாக, காவல் தெய்வமாகப் பல்வேறு ஊர்களில் வழிபடப் படுகிறது. **கூடமுடைய அய்யனார், செங்குளத்து அய்யனார், கொக்குளத்து அய்யனார்** என்ற பெயர்களில் வணங்கப் படுகிறது. அய்யனார் கோயில்கள் திறந்த வெளியில் பெரும்பாலும் கண்மாய்க் கரைகளில் நீர்நிலையை ஒட்டியுள்ள பகுதிகளில் வயல் வெளிகளில் ஆலமர நிழலில் கிழக்குப் பார்த்த வாசலுடன் அமைந்திருக்கும். வெள்ளைக் குதிரை, வேட்டை நாய், வீரர்கள் புடைசூழ அய்யனார் வீற்றிருப்பார். பிரமாண்டமான அளவில் அய்யனார் சிலை இருப்பதும் அதனைச் சுற்றித் துப்பாக்கி ஏந்திய போலீஸ், சிப்பாய்கள் நிற்பதும், நாய், பூதங்கள் போன்ற பல உருவங்கள் இருப்பதும் பார்ப்போரை மிரளச் செய்யும். அய்யனார் பெரிய கும்பிடின் போது பக்தர்கள் மண்குதிரைகளைக் காணிக்கையாகச் செலுத்தும் வழக்கம் காணப்படுகிறது. இது ”குதிரையெடுப்பு, புரவியெடுப்பு, புரவிக்காணிக்கை என்று குறிப்பிடப் படுகிறது. காணிக்கைக் குதிரைகள் ஒரே இடத்தில் எடுக்கப்பட்ட மண்ணால் உருவாக்கப்பட்டு இருத்தல் வேண்டும், கும்பிடு முடிந்ததும் அக்குதிரைகள் உடைக்கப்பட வேண்டும் என்பது மரபாக உள்ளது”[8]. ஆண்டு தோறும் பல நூறு குதிரைகள் காணிக்கையாகச் செலுத்தப் படுகின்றன. முடிவில் உடைக்கப் படுகின்றன. பலி கொடுத்தல் என்ற சடங்கிற்காக மண் குதிரைகளை உடைக்கும் வழக்கம் காணப்படுவதாகக் கூறலாம். அய்யனாருக்குச் செய்யப்படும் அத்தனைச் சிறப்புகளும் அவரது வாகனமான குதிரைக்கும் செய்யப்படுகிறது. பல இடங்களில் குதிரையையே அய்யனாராக வழிபடும் நிலையும் காணப்படுகிறது. தங்களுக்கும் குடும்பத்தாருக்கும் கிராமத்தார்க்கும் தீங்கு வரும்போது அய்யனார் இக்குதிரைகளில் ஏறி, விரைந்துவந்து காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை காணப்படுகிறது.

**சுடலை மாடன்**

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் **சுடலை மாடன்** வழிபாடு சிறப்புப் பெற்று விளங்குகிறது. சுடலை என்பது சுடுகாட்டையும் மாடன் என்பது மாட்டுத் தலையை உடையவன் அல்லது காளையை வாகனமாக உடையவன் என்றும் பொருள்படும். காவல் தெய்வமாக வழிபடப்படும் சுடலை மாடன் கோயில்கள் சுடுகாட்டிற்கு அருகிலேயே அமைந்திருக்கும். சுடலை மாடனுக்கான கொடைவிழா மூன்று நாட்கள் வெகு சிறப்பாக நடத்தப்படும். சுடலை மாடன் வழிபாடு இரவிலேயே நிகழும். ஆடு, சேவல், பன்றி ஆகியவை பலி கொடுக்கப்படும். ”பூசாரி குருதி கலந்த உணவைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று குருதிச் சோற்றை (ஆவிகளுக்கு) வானை நோக்கிச் சூறையிடும் சடங்கு தவறாது இடம்பெறும்”.

சுடலை மாடனுக்கென்று தனித்த உருவ அமைப்புக் கிடையாது. மண்பீடங்கள் மட்டுமே இருக்கும். கொடைவிழாவின் போது மட்டும் பீடத்தின் மீது உருவம் அமைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்படும். வழிபாடு முடிந்தவுடன் உருவம் அகற்றப் பட்டுவிடும். வில்லுப் பாட்டும் கணியான் கூத்தும் சுடலை மாடனோடு நெருங்கிய தொடர்புடைய வழிபாட்டுக் கலைகளாகும்.

**அண்ணன்மார் சாமி**

தமிழகத்தில் உள்ள கொங்கு மண்டலப் பகுதியில் **அண்ணன்மார் சாமி** வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது. இப்பகுதியில் உள்ள ஊர்களில் தவறாமல் அண்ணன்மார் சாமி கோயில் இருக்கும். **பொன்னர், சங்கர்** என்ற இரு சகோதரர்களே அண்ணன்மார் என்ற பெயரில் தெய்வமாக வழிபடப்படுகின்றன. கொங்கு வெள்ளாளக் கவுண்டர்களின் குலதெய்வமாக அண்ணன்மார் சாமி விளங்குகிறது. பெரிய குதிரைகளின் மேல் அமர்ந்தவாறு பொன்னர், சங்கர் சிலைகள் அமைந்திருக்கும். ''அண்ணன்மார் சாமி கதைப் பாடல் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். வழிபாட்டின் போது இக்கதை உடுக்கைப் பாட்டாகப் பாடப்படும். அண்ணன்மார் சாமி வழிபாட்டைப் **பெரிய நோம்பி** (பெரிய கும்பிடு) என்று கொங்கு நாட்டார் குறிப்பிடுவதுண்டு''.

**துணைமைத் தெய்வங்கள்**

**"தலைமைத் தெய்வங்களுக்குத் துணையாகவோ, தனித்த நிலையில் சிறிய அளவிலோ, வழிபாட்டிற்கு உட்படுத்தப்படும் தெய்வங்களே இங்குத் துணைமைத் தெய்வங்களாகக் கொள்ளப்படுகின்றன". (மேலது, ப. 222)** இவை பரிவாரத் தெய்வங்கள் என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. இந்தப் பரிவாரத் தெய்வங்களுக்கு என்று தனிப்பட்ட வழிபாடு கிடையாது. ஆனால், கோயிலுக்குள் நுழைவோர் முதன்மைத் தெய்வங்களை மட்டுமல்லாது பரிவாரத் தெய்வங்களையும் வணங்கிவிட்டே வெளியே வரும் வழக்கம் கொண்டுள்ளனர். இவை பெரும்பாலும் குல தெய்வங்களாகவோ இனத் தெய்வங்களாகவோ அமையும். பெருந்தெய்வ வழிபாட்டிலும் இப்பரிவாரத் தெய்வங்களைக் காண முடியும். இவை ஆண் தெய்வங்களாகவோ பெண் தெய்வங்களாகவோ அமையும். முதன்மைத் தெய்வங்கள் ஊர்க்காவலுக்கும் வேட்டைக்கும் செல்லும் போது பரிவாரத் தெய்வங்கள் உடன் செல்வதாகக் கூறப்படுகின்றது. மக்கள் தங்கள் குல தெய்வங்களைப் பாதுகாக்கும் பொருட்டு முதன்மைக் கோயிலில் கொண்டுபோய்க் குல தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்து வழிபடும் வழக்கமும் காணப்படுகிறது. பெரிய கும்பிடின்போது தங்கள் குல தெய்வத்திற்குப் பலியும் படையலும் செய்து வழிபடுவதுண்டு. இத்தகைய தெய்வங்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காதது.

**தொகுப்புரை**

நாட்டுப்புற மக்கள் தங்களுக்கென்று இருக்கக்கூடிய தெய்வங்களை காலந்தோறும் வழிப்பட்டு வருகின்றனர். இவ்வழிபாட்டின் மூலமாக அவர்கள் தங்களுடைய காவல் தெய்வத்தை அறிந்து கொள்கின்றனர். முதன்மைத் தெய்வம், கன்னித்தெய்வம், அண்ணன்மார்,

சுடலைமான் போன்ற தெய்வவழிப்பாடுகளை நாட்டுப்புறத்தில் இருக்கக்கூடிய மக்கள் வழிவழியாக பரம்பரையாக வணங்கி வருகின்றனர் என்பதை அறிந்துகொள்ளமுடிகின்றது.

**குறிப்புகள்**

[1] அ. ஜம்புலிங்கம். *சிறுதெய்வ வழிபாட்டில் நாட்டுப்புறக்கூறுகள்.* தனலெட்சுமி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 1982, ப.121. ப.180.

[2] சரசுவதி வேணுகோபல். *தமிழக நாட்டுப்புறவியல் குமரிப் பதிப்பகம்*, சென்னை, முதற்பதிப்பு 1991, ப.145.

[3] சு. சக்திவேல். *நாட்டுப்புறவியல் ஒர் ஆய்வு.* பாவை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 1989, ப.112.

[4] அ. ஜம்புலிங்கம். மு,நூ, ப.180.

[5] சு. சக்திவேல். மு.நூ.ப.172.

[6] சரசுவதி வேணுகோபல். மு.நூ. ப.156.

[7] ஆறு இராமநாதன், *நாட்டுப்புறவியல் ஆய்வுகள்.* முல்லைப்பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 1987, ப.186.

[8] மேலது, ப. 194.

[9] மேலது, ப.206.

[10] ஆறு இராமநாதன். *நாட்டுப்புறக் கதைகள்.* முல்லைப்பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 1987, ப.202.

[11] மேலது, ப. 222.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.